அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

நாள்: .07.2020

சி / பணிநிரவல் பிரிவு / க.எண் 1 / 2020

சுற்றறிக்கை

பொருள்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம் - பணிநிரவல் ஆசிரியர் / ஊழியர்கள் - PLI, LIC மற்றும் வங்கிக்கடன் தவணை தொகையினை நேரடியாக செலுத்த வேண்டுதல் தொடர்பாக

பார்வை: அண்ணாமலைப் பல்கலைக்கழக துணைவேந்தரின் ஆணை நாள்:

*****

அண்ணாமலைப் பல்கலைக்ககழத்திலிருந்து மாற்றுப்பணியில் பணியாற்றி வரும் ஊழியர்களுக்கான PLI, LIC மற்றும் வங்கிக்கடன் போன்ற உரிய காலத்தில் பிரிமியம் செலுத்த வேண்டிய தொகைகள் ஒவ்வொரு மாதமும் மிகவும் காலதாமதமாக இவ்வலுவலகத்தில் பெறப்படுவதால், அவை தவணை தவறி செலுத்த வேண்டிய சூழல் ஏற்படுகிறது தவணை தவறி செலுத்தப்படும் நிகழ்வுகளில் தாமதக் கட்டணம், பாலிசி முதிர்வை திரும்ப பெறுதல் மற்றும் தனி நபர்களுக்கு ஏற்படும் அசம்பாவிதமான நிகழ்வுகளுக்கு காப்பீட்டுத் தொகை பெறுவது போன்ற இடர்பாடுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

எனவே தங்கள் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும் PLI, LIC மற்றும் வங்கிக்கடன் தொடர்பான பிடித்தங்களை தாங்கள் நேடியாகவோ அல்லது ECS முறையிலோ பிடித்தம் செய்ய தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். மேலும் இது தொடர்பாக சார்ந்த நிறுவனங்கள் / வங்கிகளில் இருந்து சம்பள பிடித்தம் செய்யாமல் இருப்பதற்கான அனுமதி கடிதத்தை இப்பல்கலைகழகத்திற்கு ஆகஸ்ட் 2020 க்குள் சமர்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.